உ

முருகன் துணை.

வேங்கடாசலபண்டிதர் புத்திரர்

இயற்றிய

# முருகர் ஒயிற்கும்மி.



**பி. நா. சிதம்பரமுதலியார்**

பிரதர்ஸ் அவர்களது

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1928.

இதன்விலை Rs 0-50-

உ

சண்முகக் கடவுள் துணை.

# முருகர் ஒயிற்கும்மி.

## துதி - கவி.

மந்திர சடாட்சர சண்முகவிலாச
மணந்தவள்ளிச் சரிதையெனும் வண்மைதன்னை
விந்தைதரு மொயிற்கும்மி சங்கீதமாக
மேதினியோர் படித்தெழுதி மிகக்கொண்டாட
பைந்தமிழா லடியேன்யா னுரைத்தபுன்சொற்
பகருமொழிக் கருள்புரியும் பாபனீன்ற
சுந்தரஞ்சேர் திடமான கருத்தைக்கூட்டுந்
தும்பிமுகக்கணபதியே துணைசெய்வாயே.

## கும்மி.

தென்பரங் குன்றினின் மேவுங்குருபர தேசிகன் மேற்கும்மி
ப்பாட்டுரைக்க, சிகரத்திரு மகரக்குழை சிகமெய்ப்புகர் வடிவைத் 1
தருந் தில்லைவிநாயகன் காப்பாமே.

வள்ளியெனும்பசுங் கிள்ளையைக்கந்தன் மருவுங்கதைதனைக்கும்
மியாக, வாழ்வுற்றிட நாவிற்றுதி மேவித்தருள் பாவித்திடும்வாலை 2
மனோன்மணி தாட்டுணையே.

சங்கரசம்பு சதாசிவ னீன்றருள் சண்முகன்மேற் கும்மிப்பா
ட்டுரைக்க, கந்தக்கனி முந்திக்கிரி வந்தித்தருள் விந்தைக்குருதந் 3
திமுகன் துணையாமே.

மந்திரபூரணக் கந்தனைவள்ளி மணந்தசரிதை வகையறிந்து,
வாசத்துடன் நேசப்பிர காசந்தமிழ் பேசப்புகழ் மண்டலமெங்கு 4
நிறைந்திடவே.

தேசஞ்சிறந்த குயின்மொழியைக் கண்டு காகந்தொனிசெய்த
வாறதுபோற், சிந்தைக்கனி விந்தைப்பிர பந்தந்தமிழுந்தத்துடன் 5
செப்புகிறேனொரு புல்லடியேன்.

காரிகைநன்னூ லிலக்கணங்கற்றுக் கவிசொல்லு நாவலர்தங்க
ண்முன்னே, கல்லாதவன் இல்லாதவன் வல்லாண்மையாய்ச்சொல்லு 6
ம்பிழை கற்றறிந்தோர்கள் பொறுப்பீரே.

வாணிதமிழ்சித் திராத்திரிவருட மகாதிங்களேழ்த் தேதியினி ன், மறைவோன்குரு விரையோன் தருமுறைதங்கிய நிலையன்பதி மாநகரில் நன்னகர்வாசன். 7

விஸ்வகுலத்தி லுதித்தெழுந்த வேங்கடாசலமைந்த னுரைத் தகவி, விழைபுந்தமிழ் கழையுங்கன கிளியுஞ்சிவ கழையுந்தரும்வே லன்கிருபைசெய்வார் நிசமே. 8

ஓங்கியநாகம் படம்விரிக்கக்கண்டு நாங்கூழுங் கூடநின்றுடுதல் போல், உலகந்தனி லிலகுந்தமிழ் நிலைகண்டவரிலையங்கொரு ஆனமை கள் கண்டகனுவதுபோல். 9

விசும்புகள்தழைத் தோங்கிடவேவிசுவ வேதகுலத்திலகன்ற மிழ்க்கு, வேலன்குண சீலனுமை பாலன் அனுகூலஞ்செயல்வேணு மெந்நாளுந் துணைநமக்கே. 10

ஆழிப்பெருங்கடல் வெள்ளத்துக்கொப்பனை யாகச்சிறுவாய்க் கால் பாய்ந்ததுபோல், யானுங்கவி யேனென்றொரு தேனுங்கனி போலுஞ்சொல் வாறுமுகப்பெருமாள்துணையே. 11

மட்டடங்காத செந்தாமரைப் பொய்கையில்கொட்டி ஒருபுரம் பூத்ததுபோல், வாசன்புகழ் நேசன்திகழ் தேசந்தனிலே சம்பிர மாகவேயந்தக் கும்மிசொல்ல. 12

முத்தும்பவளமுஞ் சேர்வை செய்தாற்போற் சித்தமகிழ்ந்து நன்றாகவுமே, முன்னோர்தமிழ் சொன்னனென லென்னாசையி லிந் நாளிலே மொழியுங்கலிக் கருள்புரிவீர். 13

ஆதியந்தமுதற்காரணந் தன்னை யறிந்துநன்றாகத் தெரிந்து ரைப்போர், அடிப்பணி சூடித்தமிழ்பாடிக்கன வேடிக்கையிலானந் தங்கொண்டதிசயமே. 14

வையம்புகழுங் கலைமுனிவன்சிவ மந்திரவெள்ளி மலைக்கருகே, மவுனக்குகை யதனிற்சிவ தவமுற்றிய கவனத்தொடு மாத்திரைக் கோலுந்துலங்கிடவே. 15

கையிற்பிடித்த திருவோடுங்கறை கண்டமுங்காதினிற்குண் டலமும், காதிற்றிரு மேனிக்கொரு காவிக்குறை சோபித்திட கா ரணமாய்த் தவஞ்செய்தாரே. 15

சானகிமுன்வந்த மானதுபோலித் தவமுனிவன்றனைச் சேர வென்று, தாகக்கழை வேகத்தொடு தேகத்திலேமோகித்திடதார் வனந்தன்னி லொருமானும். 17

பொன்னிறங்கொண்டு புளகிதமாய்மேனி பூரித்துபால்ய பிரா யமதாய், பூவைநூல் கூவித்தவ வேளவிக்கிரி மேவக்கவிவேதப்பி ழைத்திட வந்ததுவே. 18

வந்ததைக்கண்டு கலைக்கோட்டுமாமுனி சிந்தைகலங்கித் தியங்கிமனம், மதனக்குளி விதனத்திலே மருகிச்செய லுருகித்திரு மாமலைமருவிக் கலந்தாரே. 19

மங்காமலேரிஷிக் கெர்ப்பமிலைமப்போதுந் தங்காதென்றே சொல்லும் வாறதுபோல், மதியைச்சிவ கதியைத்தரு மதனைக்கனி யதுவைத்திடல் வள்ளிக்குழிதனி லீன்றதுவே. 20

பானீன்றபெண்ணந்த கானகந்தன்னிலே வண்ணமணிக்குர லோசையிட்டு, வாலக்குறின் மானுக்குல லேலப்பயில் சோபித்திடு மதலையும் வாய்விட்டழுததுவே. 21

தேனுங்கனியுங் கிழங்கெடுக்கவென்று தேடியவேடர் வரும் வழியிற், செடியிற்றுட லடிவைத்தா வடிவைத்திட நடுவிற்சிறுசெல்வியைக் கையி லெடுத்தனரே. 22

கையிலெடுத்து நன்றாகவுமேயந்தக் கானவர்சேரியிற் கொண்டுசென்றார், கனியற்புத மினியைப்புகழ் மனிதற்புத வனிதைக்குற காரணமாக வளர்த்தாரே. 23

ஆணிப்பவளக் கயிர்முறுக்கியதி லந்தமுள்ளசிறு தொட்டில் கட்டி, ஆசைக்குர லோசைத்தமிழ் பாஷைப்பல பேசித்தனமன்புடனின்று தாலாட்டினரே. 24

ஆரிரரோபெண்ணே யாரிரரோகண்ணே யாராரோ ரோரிரோ நளினத்துறு பழனக்கழை யிளவற்புத வளமைத்தமிழ் நாயகமே பெண்ணே கண்வளராய். 25

அன்னமேதேனேயென் கண்ணேமின்னேயென்று ஆவலுடன்கையில் தானெடுத்து, அணிபொற்கணை மணிவச்சிர புனிதத்தொடுவனிதைக்கனி யாடைவெகு பூஷணுதியிட்டார். 26

கொஞ்சிமதலையை முத்தமிட்டுமிக்க கோலப்பணிகள் மிகப் பூட்டி, கொத்துச்சர முத்துப்பணி தைத்துப்பதி சித்துப்பெயர் கொண்டுகுலவர் மகிழ்ந்தாரே. 27

ஒன்றிரண்டாகி மூன்றாகிவய தோரைந்து திங்களுந்தானுகி, ஓடித்தெருவீதிக்குள்ளே வேடச்சிகள் கூடித்தன மோவியமாகவளர்த்தாரே. 28

மாதுவளரும் தளர்ச்சிநடையே நம்பி மன்னனுமே மங்கைமாதரசும், மங்கைச்சிமிழ் கொங்கைக்குயில் தங்கப்பணி அங்கைத்திடவள்ளியம்மையென்று பேருமிட்டார். 29

காதுகுத்திபஞ்சதக்கையிட்டுச்சின்ன காதுக்குக்காலாழியிலியிட்டு, கதிபிக்கனை மதியைப்புனை கமலத்திரு வதனத்திலே கன்னத்தைக் கொஞ்சியே முத்தமிட்டார். 30

பாடகந்தண்டை சிலம்பணிந்தார்நல்ல பதக்கஞ்சுட்டி நுதற் கணிந்தார், பட்சத்தோடு மெச்சிப்புகழ் வச்சிரப்பணி யிச்சைப்பட பாவித்துநன்றாய் வளர்த்தனரே. 31

மங்கையுமிப்படி வேடுவர்சேரியில் வாலிபம் கொண்டு வளர்ந்திடுநாள், வரிசைத்துரை மகனுக்கொரு மழைபற்புதவுறையிற் கனமாரியென்னும் பொழிந்ததுவே. 32

வெள்ளிமலைத்திட லோரத்திலேதினை விதைக்கநல்ல நிலம் பார்த்து, வெட்டுப்பயி ரிட்டுத்தளிர் மிட்டுக்கதி ரொட்டும்படி வேடுவரும்புனற் காடுசெய்தார். 33

காடுவிதைத்துப் பயிராகித்தினைக் கதிரும்வாங்கி மணிதடித்து, சாவிக்கிளி கூவித்தினை மேவிக்கதி சேரித்திட கண்டத்தவேடர்கவலைகொண்டார். 34

தந்தையுடன்மைந்தர் வந்துநின்றுநம்பி தங்கையெனும் வள்ளிநாயகியை, தனதாகியே சுனைமீறியே தினைதூவியே புனமீதிலே தங்கையுடன்காவல் வைப்போமென்று. 35

என்றண்ணமார்கள்சொற் றட்டாமலேயந்த வேந்திழைவள்ளி சந்தோஷமதாய், இன்பக்கட றென்புற்றொரு சம்பிரமத்துடனம்பிக்கையோ டேந்திழையுமுயிர் பாங்கியுமாய். 36

நீருந்தினைவனந் தன்னிலுபர்பரணேறியின் பலகைக் கவண் வாங்கி, நீலக்கிளி யோலப்பட சோலைத்துயின் மேலுக்கிட னின்றுவிழைகொண் டெறிந்தாளே. 37

பூரணவெள்ளிமலைச்சார்பில் வள்ளி பொங்குந்தினைப்புனங்காக்கையிலே, புவனத்திலே தவமுற்றிய கவனக்குரு முனியற்புத பொதிகைமாமலை விட்டிறங்க. 38

கந்தனிருக்குந் தலந்தோறுஞ்சென்று கபடநாரதன் சேர்வை செய்து, காவித்திரி வேள்விக்கிரி சோபித்திட மேவிச்சிவகாரண மாமுனி வந்தாரன்றே. 39

ஆலோலமாலோல மென்றுசொல்லி வள்ளி ஆனந்தமாகக் கவணெறிந்தாள், அசையத்தன மசையக்குட மிசையத்தன விசையிற்றொரு வாரைக்குரண்மணி யோசைசெய்தாள். 40

ஏகலாப நாரதன்றனிது வேதவதிசெயந்தானெனவே, இந்தக்குரல் சந்தப்பட வந்தத்தொடு விந்தைத்தொனி யிதுவும் பெண்குரல் தானென்று. 41

யோகத்திலேகண்ணை மூடிநின்றார் சிவயோகியெனுந்தவமாமுனிவன், யோசித்ததை கேசித்துளங் குசிப்பிர காசித்துடனொடொடி வள்ளியைக்கண்டாரே. 42

பூரணவாகு மனோன்மணியோ யிவள் பூலோகரம்பையோ பொன்மகளோ, புவனத்திலே இவளுக்கிணை யெவளோ சரி தருமோப் பிடபூமண்டலத்திலுங் கண்டறியோம். 43

என்றுமுனிவன் பரனெதிரே நின்று எந்திழை வள்ளிதனைப் பார்த்து, வேதப்பிர வாகக்கடலாசைப்பரிதாபத்தொடு வேறுவயனமெடுத்துரைப்பார். 44

பேரென்னவூரென்ன அரம்மாநீசொல்லு பேதையரே பேசுங் கோதையரே, பிரமித்துள மகிழக்குற மரபிற்கன வறமுற்றனைபெற்றிடுத்தாய்தந்தை குடியிருப்போம். 45

சொல்லுவன்கேளையா மாமுனியேநாங்கள் சொற்றவறாதகுறச்சாதி, சொந்தக்கிளை பந்துத்துவ மிந்தக்கிரி விந்தைப்புகழ் சூழுஞ்சிற்றூரங் குடியிருப்போம். 46

தந்தைநம்பிராச னெங்களையாவெந்தன் தாய்பெருநங்கையென்றேசொல்லுவார், தவமுற்றிய சிவசுந்தர மவுனங்கொடு புவனந்தனில்சாமிதிருநாமஞ்சாற்றுமென்றாள். 47

நானிலமெங்கும் புகழ்படைத்த வள்ளி நாயகியேசொல்லக்கேளுமம்மா, நாதம்பல நீதம்பெற வேதங்களை யோதும்புகழ் நாரதனென்று பெயருரைப்பார். 48

கேளுந்தினைவனம் வாழ்மயிலேயுனக் கேத்தமணவாளன்பார்த்துவந்தேன், கிருபைக்கடல் தருசுப்பிர மணியத்துரை யுனைமெச்சியே கிஞ்சுகம்போலடி கொஞ்சிடவே. 49

வேதமுனிசிவ ஞானத்திலேயுண்மை மெத்தப்பெரியோரென்றேபொறுத்தேன், விகடத்தொழில் சகடத்திலே புகழுக்கெடின் மகுடச்சடை வீணாக்கொண்டு முடித்தாயே. 50

கந்தனைமேவிக் கலந்ததனாலுன் கனக்குறையாமோகுறக்கொடியே, கள்ளத்தொழி லுள்ளத்திலே எள்ளத்தனை விள்ளத்தகாதபடமென்று நினையாதே. 51

வேதஞ்சிறந்த தவமுனியேயுந்தன் வித்தைசளென்னிடஞ்செல்லாது, மெட்டுப்பயி லொட்டுக்குளிர் விட்டுக்கதை கட்டுக்கடைமேன்மைக்குறக்குல நாமல்லவோ. 52

தேசங்கடோறுங் குறம்பாடிக்கொண்டு திரியுநாங்கள் குறச்சாதி, சின்னத்தொழி லெண்ணத்திலே யுன்னிக்குலம் பன்னப்படசீருங்குலந்த தறியேனே. 53

தாதுமாறாய்மொழி பேசாதேயுன்னைத் தவமுனி யென்றுஞ்சொல்வாரோ, சோதித்துளம் பேதித்திட வாதித்தனை யேதிப்படி, சற்றுமதியாமற்பேசுகிறாய். 64

துள்ளுமெனுது பொதிசுமந்தகதை தொல்லுலகோர்சொல்லக் கேட்டிலையோ, சோபத்தன பாரத்திலே சேரத்திலே தாயுற்றவர் சுப்ரமண்யக்கந்த நாதனல்லோ. 55

ஆர்சொன்னாரிம்மதி நாரதனேயிந்த வழியில்லாச்சொல்லெடுத்துரைத்தாய், அடமுற்றொரு கடனத்தொழில் திடமுற்றுயர்தடமிட்டு மப்புறம்போயிங்கே நில்லாதே. 56

வாலசரவணவேலனுக்கேத்த மாப்பிள்ளை தான்வள்ளி நாயகியேவனமிருந்தொளி ரிங்கிதத்திரு மங்கிலியத்துடன் கழுத்திலே மாலையிட நல்ல வேளையிதே. 57

மெய்யன்புகொண்டசன் யாசியென்றேயிந்த வேளைமட்டுஞ்சும்மா நான்பொறுத்தேன், மிஞ்சுந்தொழில் வஞ்சகந்தர நெஞ்சந்தனிலஞ்சும்படி வேடர்கள்தேடி வருவாரே. 58

வள்ளியெனுஞ் சிறுபெண்ணையுனக்குத்த மாப்பிள்ளை வேலனே தான்சரியாம், மானுஞ்சுக மேலும்விழி மேலுந்தனத்தாலுந்தரவாலிங்கனக்காலம் வரவில்லையோ. 59

ஆரணியந்தனி லொருநொடியி லெந்த னண்ணமாரேழ்வருந் தான்வருவார், அப்பாவெகு திடமாயுயிர் படவேதனை தொடுவாருயிர் அப்புறம்விசனப் படவேண்டாம். 60

நல்லசுபதின வேளையிலேயுனை நாதன்சிவகிரி வேலனுமே, நாளைக்கலியாணஞ்செய மேளத்தொடு தாயத்தொணி நாதன்வேடிக்கைபார்ப்போ மென்றார். 61

வீண்சமயபிரதாயம் படியாதேயிங்கே வேறே தொழிலில்லையோமுனிவே, வேசைப்பயல்போல் பேசச்சனி யாசிக்கிது ரோசிக்குமேவிண்ணாட்டுநாரத மாமுனியே. 62

எந்தவிதஞ்சொல்லி வள்ளிக்குச்சம்மத மில்லையென்றேமுனி தான்திகைத்து, வெங்கும்பிர சங்கந்தர தெங்கண்ணழல் பொங்கும்படி ஏங்கிநின்றே மூர்ச்சை வாங்கிநின்றார். 63

செல்வக்குறமின் திருவடிவைக்கொண்டு சித்ரமடலிலெழுதவென்றே; சிந்தித்தவள் கந்தர்க்கிணை பந்தத்தொடு சொந்தப்படசேரும்படியாய் முடிக்கவென்று. 64

பாதாதிகேச முதற்பரியந்தம் பைந்தொடிவள்ளித் திருவழகை, படியைத்திரு முடியைச்சுக மடலித்திரு வொளியைத்தரு பார்த்து நன்றாக வளர்ந்தாரே. 65

கார்நிறங்கொண்ட குழலெழுதியதிற் கமலமல்லிகைப் பூவெழுதி, கருணைப்பெரு நுதலிற்புகழ் கமலத்திரு வழகைச்சரி கண்டுமனமுங்கலந்தெழுதி. 66

வேல்விழிக்கஞ்சன மையெழுதி யதின் மேலேதனுசுநுதலெழுதி, விசும்புகழ் கேசந்திகழ் வாசன்வர காசந்தரமேலேயதிலொருபொட்டெழுதி. 67

வள்ளைத்தண்டைபோலே காதெழுதியதில் வச்சிரதோக்கல் முருகெழுதி, மாரன்குயில் கூறுந்தொனி மீறும்படி சேருஞ்சுகமன் மதபார்வையுங் கண்டெழுதி. 68

செண்பகம்போல்நாசி கண்டெழுதி யதிற் சிங்காரமூக்குத்தி தானெழுதி, மாரன்குயில் கூறுந்தொனி மீறும்படி சேருஞ்சுகமன் மதபார்வையுங் கண்டெழுதி. 69

மோகனமுத்துப்போற் பல்லெழுதி யதின் முல்லையரும்புநகையெழுதி, முனிவோர்களு மினிதாயொரு மனதாகியகனிபோலவு மோகித்தருந்தும் படியெழுதி. 70

காமன் கணைதீட்டுஞ் சாணையைப்போலக் கபோலமிரண்டையுங்கண்டெழுதி, கதியஞ்சுக மதியுந்தரா துதிருஞ்சுவை மதுரப்பெற கன்னிக்கமுகன் கடித்தெழுதி. 71

கச்சணி கும்பத்தனமெழுதி யதிற்காமரசத்தைக் கலந்தெழுதி, கண்டஞ்சிபே ரின்றும்புகழ் கொண்டஞ்சுக மண்டும்படி தழைமையப்போலிரு தேளெழுதி. 72

தங்கப்பணிகள்மிகவெழுதியதிற் சங்குமணியைக் கலந்தெழுதி, தாகத்தொடு மோகக்கணை தேகத்திலே மோகித்திட சம்பிமரோமையுங் கண்டெழுதி. 73

மால்கண்வளருந் தளிரதுபோல் நல்ல வயிறுமுந்திச் சுழியெழுதி, மாரன்கணை மீறுங்கன தேருந்திரு நாளுந்தர மன்மதன் சின்னங்கடாமெழுதி. 74

கஞ்சமலர்க்கரமிரண்டெழுதி யதிற் காந்தளப் பூவைக்கனிந்தெழுதி, கானக்குல மானைத்திரு மேனிக்கழ கானகத்தொரு கற்பனையாயிடை கண்டெழுதி. 75

ஆசைவிளையுங் களஞ்சியத்தைதப்பா மானந்தமாகிய தன்கூடே, ஆருங்கரி கூறுஞ்செயல் தேறுஞ்சுக மீறும்படி யல்குத்தடத்தையுங்கண்டெழுதி. 76

வானச்சரிகைத் தாயிலெழுதி யதின் மாதளம்பூவைச் சிறந்தெழுதி, மடமாதர்கள் திடமீறியே துடைதானொருபடமீதிலே வாழை நிகர்த்திடத் தானெழுதி. 77

நண்டைப்போலே முழந்தாளெழுதியதில் நல்ல விரற்கண்டைசேர்த்தெழுதி, நளினத்திரு வடிவைக்கொளு மொழ்மைத்திகழொளியைத்தரு நான்முகபுத்தகம் போலெழுதி. 78

வள்ளியழகைச் சுகமடலிற்கண்டுமகிழ்ந்துநாரதமாமுனிவன், வாசனுக்குமரேசனுக்கிவ ணேசமுற்றது வேமகத்துவ மந்திரக்கந்தனுக் கோதவென்றே. 79

வெள்ளிமலைப்புனம் விட்டகன்றே யந்த வேதமறைமுனிநாரதனும், விந்தைக்கிரி மைந்தர்க்கொரு கந்தர்க்கிவ ளந்தக்குயில்வேடிக்கையாய்வழி கூடிச்சென்றார். 80

சித்திரமடலைக்கையிலேந்திக்கொண்டு சென்றுமுனிவன்விரைந்தேகி, சேவற்கொடி கூவத்தினஞ் சோபித்திட வாழ்வுற்றிடுஞ் சிவகுமாரனை வந்துகண்டார். 81

கண்டவுடன்முனி தெண்டனிட்டு அந்த கந்தனையும் வலமாக வந்து, காதுக்குளே யோதிச்செயல் போதித்தொரு மாதுற்றிடுங் காரணன் தான்சொல்லக் கேளுமென்றார். 82

ஐயனேயென்குரு வேசாமி யிந்த அண்டகுலகெல்லாம்பார்த்துவந்தேன், அதிமோகன ரதியோயிவள் சதிபூரண மதிதானென ஆச்சரியஞ்சொல்லக் கேளுமென்றார். 83

தென்பொதிகாசலம்விட்டிறங்கி யிந்த தேசங்கள் சுற்றிவரும் வழியில், செகமோகினி யிவளோவெனை சுகமேவிய மகள்சீருடைய தெய்வமடந்தையைக் கண்டுவந்தேன். 84

மின்னற்பிரகாச விளக்கொளியோ இவள் மெல்லியர்க்கெல்லாங்குலக்குடியோ, வேதனிப்படி மாதொருத்தியைசூதெனக்கபடாய் விதித்தது வேடர்தினைப்புனங் கார்க்கவென்று. 85

வாயினாற்சொல்லவுங்கூடாது கண்டால் மற்றொருபெண்களைத் தேடாது, மங்கைக்கிவ ளங்கைப்பணி தங்கச்சிலை யுங்கற்பனை மானைமடலி லெழுதிவந்தேன். 86

பன்னிருகண்ணினுங் கந்தசுவாமிநீ பாருமென்றே மடற்கைக் கொடுத்து, பாதபொற்கமலாசனத்திலே நீதமுற்றொரு சூதகற்றியேபணிந்துநாரதன் தெண்டனிட்டான். 87

கந்தன்சுகமடற் கைதனில்வாங்கியே கண்சிமிட்டாமனின்றே திகைத்து, கவலைக்கடல் பெருகத்திரி புவனத்தினு மிவளுக்கிணை கண்டதில்லையென்று காதல்கொண்டார். 88

கண்ணேபொன்னேபெண்ணே வள்ளிவள்ளியென்று கையில் மடலைப்பிடித்துக்கொண்டு, காமன்கணையைந்தும்படசோபம்மிகவே வந்திட கந்தன்மயங்கித் தளர்ந்தானே. 89

கட்டிப்பிடித்தென்னைச்சேராயோ பெண்ணே காமக்கவலையைத்தீராயோ, கமலத்திரு வதனத்திலே முகம்வைத்தொரு சகம்பெற்றிதழ் கனியைநீ தந்தா லாகாதோ. 90

பெண்கொடியேபசுந்தங்கமே நீசற்றே பேசினால் வாய்முத்த
ஞ்சிந்திடுமோ, பேதகத்தோடு பாதகத்தினீ தோதகத்தொழிலே 91
யிருந்தவள் பேசாமடந்தையோ சொல்லுமென்றார்.

கண்ணிமைகொட்டாத தென்றவமோபெண்ணே காமக்களஞ்
சியமோவறியேன், கற்பகத்திரு வெற்படுத்துணை வைப்பதற்கொரு 92
வெற்படுத்தவர் கன்னஞ்சவேடர் கண்டார்மயிலே.

வாலசன்னசியோ போவொண்ணாதசொல் மவுனமோசுகமா
தாசே, வாசகத்தொரு நேசகத்திலே யாடைவென்றார் லோசை 93
யேபடவாய் விட்டடங்காத மையல்கொண்டார்.

சித்தமிரங்கியுருகாதோ வுன்னைத் தேடியென்மோகம்பெருகா
தோ, தேகத்திலே மோகித் தெமையோகப்பிர தாபப்படச் செங் 94
கைராமன்தொண்டு புரியேனே.

வாய்திறந்தோர்மொழி சொல்லாயோவந்த மன்மதராசனைவெ
ல்லாயோ, மகுடக்கன பாரத்திலே சுகமுற்றனுபோகத் தொழில் 95
மாறுமல்தொண்டு புரியேனே.

கட்டிக்கலந்து சுகந்திர வுன்னைக்கட்டிப் பிடித்தேதன்சுகமடலே
காமக்கனை மீறிச்சுக போகத்தொடு பூமிக்குளே கந்தர்மடலையும் 96
விட்டெறிந்தார்.

வாலசுப்ரமண்ய வேலருயிப்படி மயங்கிமெத்தையி லேசாய்ந்
தார், வானோர்சுக மீனார்விழி தேனளிது காணுமலே மாதுதெய்வா 97
னையுமோடிவந்தாள்.

அருகில்நின்றிடும் நாரதரைக்கண்டு அன்னைதெய்வானையுமென்
னசொல்வாள், ஆதியிற்கப டாவிதித்திடசாதியிற்றொழிலோவுமக் 98
கிது அருந்தவமுனிவோர்க்கழகோ.

அன்னைதெய்வானையே சொல்லுவன்கேளம்மா அடியேன்மே
லொரு தோஷமில்லை, ஆறுப்படை வீடும்வினை யாடுங்குகை நீருஞ் 99
சுனை யாடியேசுற்றி வரும்வழியில்.

வேள்வி மலையென்னுங் கானகத்திலங்கேவேடர்குறக்குலவள்
ளிதன்னை, விரிவாகிய பரிபூரண மதிபோலவே சதிராயொரு மின் 100
னைக்கண்டேனென்று சொன்னதல்லால்.

மங்களமாய்குற மானைமணந்துநீர்மாலையிடுமென்றுபேதகமா
ய் வடிவேல்விழி மடமாதையு மிடியாளுமக் கடியாளென வாயினாற் 101
சொல்லவு மில்லையம்மா.

உண்டவீட்டுக்குநீ ரண்டகஞ்செய்தாயே ஓகெடுவாய்பாவி நா
ரதனே. யுள்ளாகநீ யில்லாமலே கள்ளமொழி விள்ளாதேநீயுன்னு 102
டநேசதி தெரியாதோ.

இந்திரன்கண்ணே பசுங்கிளியே சும்மா யென்மேற்சமுசயமெ ண்ணாதே, இனிதாகிய கனிவாயருந் தனதாகவே மனதாகுவரிஷ் டஞ்செய்வதுநீ கண்டாயே. 103

இத்தனையுஞ்செய்து கத்திரிகட்டவ னில்லையென்றே பொ சொல்லவந்தாய், இதைநீயொரு கதைபோலவு மதிமயா நல வி யோசொரனு மென்றைக்குஞ் சந்தேகந் தீராதே. 104

குண்டுணிகாரத னென்றுனையிந்தக் குவலயத்தன்னி லெடு துரைப்பார், குறையாகிய நெறிபேசியே பரியாசமாயெனையே கவா கொண்ட சின்னத்தனங் கூறுகண்டாய். 105

தொட்டிலையாட்டித் தொடையை நெருடிய தோதக வித்தை யையானறிவேன், சுபசோபன மதுபேசிட முகமாயமோ இதுபாய மோ சுந்தரவள்ளியைப் பொலெழுதி. 106

சித்திரமடலையென் சுவாமிக்குதந்து நீமித்திரபேதங்கள்செ ய்யலையோ, தெரியாதுள மறியாததோ பெரியோர்தவ னெறிதானி தோசிக்கிரம்போவென் றெழுந்திருந்தார். 107

சித்திரமெத்தைதயில் நித்திரைசெய்கின்ற செந்தில்வேலாண் டியைத் தான்பார்த்து, தெய்வானையின் வைபோகமும் பொய்யோ னை உய்யும்வகை தெளிந்துவிண்ணப்பஞ் செய்யலுற்றான். 108

கந்தரேநீயொரு கம்பத்திரண்டானை கட்டவென்றோ விந்தக் கோலங்கொண்டீர், கருணாகரமதுபோலவே குறமானையு மறவாம லேகாதல்கொண்டீரென்ன பேதகமோ. 109

என்னிலும்பார்க்க வதிசயமோ வந்த வேடக்குறத்திமே லிச் சைகொண்டீர், எங்கும்புகழ் மாதேனிவ் ளெங்குகிடையாதேசொ ல்லுமென்ன சொல்லியினி யாவதென்ன. 110

அந்தப்புளிப்பு மறிந்துபாருமென் னுசைக்குமா குருபரனே, அயில்நேர்விழி மயிலாளையுங் கைலாகுடனொருமிலாகவேயன்புடனே மணஞ் செய்யுமென்றாள். 111

சந்தோஷஞ்சந்தோஷ மென்றெழுந்தார் கந்தர் தாகந்தெளிந் துமனங்குளிர்ந்தார், தனதாகிய மனைபாவொரு மனதாகவேசரணு கதிதந்தே விடைகொடுத் தேகுமென்றாள். 112

வள்ளியிருக்குந் தினைவனச்சோலைக்கு வழியென்கே சொல்லு ம்நாரதனே, மறவாதொரு குறமாதையு முறவாகியே வரவேணு வாவென்றடங்காத மையல்கொண்டார். 113

வில்லம்புகொண்டு வேடராசன்போலே வெற்றிமகுட முடிபு னைந்து, வேலாயுத கோலாகல சீலாவனு கூலாவரவேணுமென்று ரந்த நாரதரும். 114

அப்படியேகந்தன் வேடுவர் கோலங்கொண்டாறு முகமொரு முகமாய், அருகேமுனி பிறகேவர குருவாகிய துரைவேலவரானத் தங்கொண்டு முன்னேநடந்தார். 115

[illegible]கரும்பாரதரும்வழிகூடியே காடுசெடியெல்லாந் தான்கடந் [illegible]மொழி இனிதாகவே தினைதூவியே வனமேதெனக் [illegible]டந்தாரே. 116

பொன்மலையான மலைகடந்தார் பொங்குங்குற்றால மலைகடந் தார், பொதிகாசல மதிலேசிவ கதியாகிய நதிசூழ்தவம்புரியுங்கோ சிகமாமுனிவன். 117

வெள்ளிவடக்கு மலையிதுதா மிங்கே மெத்தவுஞ்சித்தானேக முண்டாம், வெகுவாகிய தவமேவிய குகைபாரென விரைவாகவே விண்ணாட்டு நாரதன் சொன்னதுவே. 118

கந்தன் திகைத்து மதிமயங்கி யந்தக் கானகமெங்குந் திரிந்த லைந்து, கனபேதையின் மனதாகினேன் றளதாகிய வனவாசமே கன்னிதினைவனங் காணீர்களோ. 119

போதனைக்குள்ளென்னை யாளாக்கியெந்தன் புத்தியைப்பேதக ஞ்செய்தாயே, பொய்யோயிது மெய்யோவுன்றன் செய்கோலமோ ஐயோவிந்த புல்லிடத்தேனில்லை நாரதனே. 120

சித்தமயங்காதே ஐயாவே யுன்றன் சிந்தையில் வேறெண்ண ம்வையாதே, தேனார்மொழி மானாளையும் பூணுமலே வீணாகுமோ சீக்கிரம்வாருமென் சுவாமியென்றார். 121

மந்திரவேள்வி மலைக்கருகேயந்த வள்ளிதினைவனந் தோற்று துபார், மலையாதேநீ மெலியாதுவந் தலையேதினி நிலைபாரிதுமான் மருகாகதிர் வேல்முருகா. 122

சோலையிளங்குயில் மாமயிலாள்வள்ளி போலமென்குரல்பேசு கிறாள், தொனியேயிவள் மணியோதிகழ் பணிசேர்மொழி தினைகா விலே சுந்தராசாதாரக் கேளுமென்றார். 123

காதாரக்கேட்டு முன்னேநடந்தார் முனி காலக்கதிகொண்டு பின்றொடர்ந்தார், கருமாமுகில் நிரமோகுழல் தொனியோகுயில் நடையோகிளி கந்தர்தரிசனங் கண்டாரே. 124

கண்ணுக்குள்ளே நின்ற கண்மணியோவந்த காமன்ரதியோ கதிர்மதியோ, கனசோபித மெனவேயிவள் தினமேவிய வனமே வருங் காரணமேதுசொல் வாய்முனியே. 125

தோகையெனுஞ்சுக பேதையரே யுன்மேற் காதல்கொண்டே னடிமாதரசே, கொஞ்சுங்குயில் மிஞ்சுந்தொனிநெஞ்சந்தனில் வஞ் சந்தாரகூவுதல்லோவிளஞ் சோலையிலே. 126

மாரன்விடுங்கணை பட்டுருகியெந்தன் மாரைப்பிளக்கு தடிமயி லே, வாவென்றனை மேவுந்தொழில் காவுங்கண தாவுண்டிட மன் மதன்போற்கூட மாட்டேனே. 127

வந்தவிருந்துக் குபசரித்தன்னம் வழங்காத பேருண்டோவை யகத்தில், மானேகனி தேனேயடி தானேமய லானேன்முழு வஞ் சகநெஞ்சம் படைத்தாயோ. 128

சொன்னதெல்லாங்காதிற் கேழ்க்கிலையோபெண்ணே என்னை யுங் கண்ணாலே பார்க்கிலையோ, சோபந்தன மேவுங்கணை தாபம் பெயர் நீவந்தெனை சொந்தமாய்கைவசம் செய்யாயோ. 129

பேசினதாற்குலம் தாழ்வாமோ யிளம் பேதைபரேயுந்தன்வா ய்நோமோ, பெண்ணேயடி கண்ணேமனம் புண்ணாகுது சொன்னே னுந்தன் பேரென்னசற்றேநீ கூறுமென்றார். 130

கந்தனுரைத்த மொழிகேட்டு வள்ளி காதிலிருகையை வைத் துநின்று, கருணாகர வருணாசல வருவாய்துணை குருநாதனே காதி லுங்கேழ்க்க விதியாமோ. 131

ஆகட்டுமென்று மனந்துணிந்து வள்ளி மோகித்த கந்தரைத் தான்பார்த்து, அடமோகன திடமோ அவ கடமோயென திடமீதி வர்யார்சொன்னமதியிது வேடுவனே. 132

வாய்திறந்தோர்மொழி சொன்னதென்னிட மாதவம் தானடி கண்மணியே, மாரன்கணை மீறுந்தன பாரந்தனிலேவந்துனை மருவி யேமோகந் தெளியேனோ. 133

மெத்தபடித்தவன் போலேவந்தாய்நீ பித்துப்பிடித்ததோவே டுவனே, வேலுந்துணை கீழுந்துறங் கோலஞ்சக காலக்கதை வீணா கநீகெட்டலையாதே. 134

ஓதடிபஞ்சமா பாதகியேமுன்னே வாதுசெய்யாதே பழிகாரி, இன்பாய்வெகு சம்பந்தமா நம்பும்வுனை யன்பங்கிலே என்றைக்கனு க்கிரகஞ் செய்வாயோ. 135

எட்டாதகேனுக் கொருநெர்ண்டி யண்ணாந்துகோட்டாவிவிட் டக்கதைபோலே, ஏங்கிக்கனை தாங்கிப்பிணை வாங்கியிக ஓங்கியெ திர் என்முன்னே நில்லாதே வேடுவனே. 136

இப்படி நீ முழு வஞ்சகமாயென்னை கற்பனைசெய்வானேன்மாத ரசே, ஏழைக்கொரு வாழைக்கனி வேளைக்குத வானிப்படி இன்ன மும்மர்மம் விடாயோநீ. 137

அண்ணமாரம்பு கொண்டேவருவாருன்னை ஆழித்துக்குலையை ப்பொருத்திடுவார், அங்கந்துளை பங்கம்பட வெங்கும்பிர சங்கந்தர அற்றுவிழத்துண்டு செய்திடுவார். 138

அற்றிருந்துண்டாய்நான் பட்டாலும்வெட்டாற்றுவிழுக்கணைதொ
ட்டாலும், ஆசைக்கொரு நாளைத்தினம் பேசிச்சுக தாபத்துடனன்
றிலும் பேடும்போற் கூடேனோ. 139

சுற்றிசுற்றிவட்டம் போட்டுவனமெங்கும் சுத்தி நின்றேங்கி
மெலியாதே, சொல்லக்கேளை யில்லைப்படு கள்ளத்தொழி லுள்ளத்தி
லேதோழியரைவிட் டடிக்கச்செய்வேன். 140

மங்கையர்கையி லடிப்பட்டால்நான்தெய்வ கெங்கையாடும்பல
னைப்பெற்றேன், மயிலேகுற மயிலேகருங் குயிலேவிழி துயிலேன
டிவக்கொருமுத்தந் தாராயோ. 141

ஏதுபரியாசமிஞ்சுகிறாய் பெண்கள் சேதியறியாமற் கொஞ்சு
கிறாய், இனிமேலுனை முனிவேன்பயஞ் செனியாமலே துணைவாகவீ
என்னகோலஞ்செய்ய வந்தாயோ. 142

கோலமெல்லாங்காமக் கோலமல்லாமல் வேறே கோலமுண்
டோ உன்மேல் மயலானேன், கூவுங்குயில் மாவுங்கள நாகஞ்சுக
மேவுந்தொழில் கூடும்பருவ மிதுவுனக்கே. 143

கொம்பிளவிற்பட்ட மந்தியைப்போல்நின்று வெம்பித்திரிவது
மெலியாதே, மண்டாய்மனங் கொண்டாய்மயல்துண்டாகுவாய்சொ
ன்னேனண்ணர் காணாமலோடுவாய் வேடுவனே. 144

பஞ்சையைப்போல்நின்று கெஞ்சுவேனோவடி வஞ்சியின்வேல்
விழிக்கஞ்சுவேனோ, பழியாகிய மொழிபேசுவாயடியேன்மனத்தொ
ழியாதடி பாவியுன்சித்த மிரங்காதோ. 145

ஆர்குடிதன்னைக் கெடுக்கவென்றோசிவ னாண்டிவேஷங்கொண்
டுவந்தாண்டி, அவனுறிது புவிமீதிலே சிவனார்செய லதுபாரடிவன்
னமேயென்னுயிர்ப் பாங்கியரே. 146

பாங்கியருமந்த வேடனைப்பார்த்துப் பதைத்து நின்றேமொழி
சொல்லலுற்றாள், பழிநாமனே தெரிவாகவீ மொழிபாதேபொய்வழி
கூடுவாய் பாங்குகுலைந்திட நாணாச்சோ. 147

இவ்விதமென்மொழிப் பாங்கியரோக்க ளெனக்கும்வள்ளிக்கு
ம்பொதுவாமே, என்றுந்தன தென்றுந்தனை யென்றும்மற வென்
றும்மினி என்றைக்குங் கீர்த்திபுண் டாகுமென்றார். 148

வங்கணமுள்ளவன் போலேவந்து பெண்ணை வாதிட்டு வய்க்க
வென் றிங்குவந்தாய், மதமோவென விதமோயிது சதமோதுரா
கிதமோவிது மார்க்கமல்லவண்ணா வேடுவனே. 149

நம்பினபேரை நடுங்கிச்செய்தல் நம்பன் நன்றென்று மக்குத்
துணைசெய்வாரோ, நாடுந்தொழில் கூடுஞ்சிறு பேடுஞ்சரி சோடுந்தர
கன்றாக நான்மணஞ் செய்வேனென்றார். 150

கந்தனும்வள்ளியும் பந்தமாய் நின்று கைசரசமிஞ்சும் வேளை
யிலே, கதருங்குட லுகருங்கலை யுதறும்பொறி சிதறும்படி கானக்
குறவர்கள் வந்தாரே. 151

கானகந்தன்னிலே வேடுவருமெய்ஞ் ஞானக்குமர குருபரனுங்
கண்டஞ்சியேயின் றஞ்செய லென்றும்புகழ்குன்றந் தனில்க்காரணமா
ய்ங்கையாற் காட்டிலொன்று. 152

பூவுந்தழையுங் குலுங்கியபிஞ்சுங்காய் புதுமையாகவளர்ந்தோ
ங்கி, பொங்கும்வன மெங்கும்பிரு ளங்குந்நிழலெங்குந்தர பூரித்து
வேங்கை மாமானார். 153

வாகெல்லாம்போய் முளைத்திடும்வேங்கைமரத்தையுங் கண்டு
மதிமயங்கி, மலைவேடர்கள் சிலர்கூடியே பலயோசனைசெய்தேயிது
வஞ்சனையென்று நினைந்து சொல்வார். 154

என்றுமில்லாவிந்த வேங்கைமரமிங்கே யின்றைக்குவந்து மு
ளைப்பதென்ன, ஏதோயிது சூதோவென தீதோதெரியாதே யென
யேந்திழை வள்ளியைக்கேட்கலுற்றார். 155

தங்கைபெனும் வள்ளிநாயகியே அம்மா எங்கள் குலக்கொழுந்
தேகேளாய், சதிராகவுன் னெதிரேயொரு விதிகாரண மிதுவேதெ
னதயவாகவே வள்ளிசாற்றலுற்றாள். 156

விள்ளுகிறேனினி யண்ணமாரேயந்த வேங்கைமுளைத்ததை
யானறியேன், வினையாகவே தினைதாவியே வனமீதிலே கனிபோல
வேவிம்புக்கு வந்துமுளைத்ததென்றாள். 157

பைங்கொடிவள்ளி யுரைத்ததைக்கண்டிந்த கந்தன்செயலென்
றுவேடுவரும், பாஷைக்குரா லோசைப்படி நேசத்துடன் பேசித்தி
னம்பாலைவனத்தி லதிசயமே. 158

தங்கைக்குவேங்கைமரந்துணையாய்நல்ல காவல்யமாவெகுசோ
பிதமாய், தங்குல்புனல் பொங்கும்வன மெங்கும்நிழல் தங்கும்படி
சண்முகநாதன் துணையிருப்பான். 159

எதுக்குமஞ்சாதே மாதரசே நாங்கள் சோதிக்கதிர்கொய்தே
வருவோம், என்றந்திகழ் கண்டுங்கன குன்றும்பதி கென்றுஞ்சில
வேடக்குறவர்கள் போனபின்பு. 160

வேங்கையாய்நின்ற வுருவமாறி யந்தக் காண்டேயன்வேடர்
வடிவாகி, விரகத்தமை பெருகிச்சுகம் சரசத்தொடு மருவிக்குறமெ
ல்லியர்தம்மிட மேதுசொல்வார். 161

உன்னைமறக்கப்படவில்லையே யெந்தன் கண்ணுக்குறக்கம்வர
வில்லையே, உனதாசையின் மனதாகவே நினைவாகுது தனதாகநீ
யுற்றதுணையென்று நம்பிவந்தேன். 162

ஆசைகொண்டபேர்க்கு ரோஷமில்லையென்று பேசவந்தாயிது வேடுவனே, அடமாகிய மடவார்களி னிடமேவருகடனே தினியா சாரங் கெட்டவ னீயல்லவோ. 163

ஆசாரமுங்கள் வாசாரமேபெண்க ளாசாரமெல்ல மறியேனோ அடிபாதகி கொடிதாகநீ துடியாமனம்படையாதேநீ அன்னமேதேனே பெண்மயிலே. 164

வம்புக்குச்சண்டை வளர்ப்பதில்லையெந்தன் கும்புக்குறக்குலம்பேசுவேனே, வாதும்பல சூதுங்கள நீதும்பலி யாதெங்களைமாறுட் - நசெய்யமுடியாதே. 165

பம்பிலேமாபாவி நாரதன்வார்த்தையை நம்பிவந்தேன்மதி கெட்டலைந்து, மதனன்கணை யதுவந்தெனை நிதமுந்தவ சிவசிந்தை மதியும்பேதக மானதுவே. 166

கண்மணிபாவையை வெட்டிவெட்டிச்சும்மா கையிற்பிடித்தால கப்படுமோ, காடுந்திட மேடுஞ்சிறு யோர்டுங்குயில் பாடுந்தொனிகா மாசத்தை விளைத்ததென்றார். 167

அந்தட்சணத்திற் குரவருமன்புடன் வந்ததைக்கண்டுகபடமதாய் அருள்வேலவ னொருமாதவ னுருவாகியே குறவோர்கண்முனங்கம்வெடுவெடுத்தாடி நின்றார். 168

தொண்ணூறுஞ்சென்ற கிழவனைப்போலுடல் தொங்கியேகண்களும் பஞ்சடைந்து, கழல்வாய்மொழி குளிர்வாகிய தளர்வாயதிர்பழமாகவே தோன்றியே காஷாயம் பூண்டுநின்றார். 169

கொட்டியபஞ்சைப்போ லேநரைத்துப்பல்லுங் கிட்டியேவாய்நீர்கழிந்தொழுக, ஞ்காலஞ்சுக காலம்பணி தாளம்வெகு காலந்தனை கொண்டுகடந்த பெரியவர்போல். 170

செம்புலித்தோலும் விபூதிபஞ்சாட்சரத் தெண்டுகமண்டலங் கைபிடித்து, சிவனேயருள் பவனேயினி யவனேதுணை கதிநீயென தெளிந்தயோகியைப் போலேநின்றார். 171

கானகநீதன்னிற் றபோதனர்வந்ததும் காரணந்தானென்று பூரணமாய், கனவேடர்க ளனைவோர்களுந் தனதாயொரு மனதாக வேகழலிணைபோற்றி பணிந்துசொல்வார். 172

ஐயாவேபண்டாரசுவாமிநீ யெங்களையாண்டகுலதெய்வம்போலவுமே, அடிமேலடி தடுமாறியே கொடிதாகியசுடுகானிலே அங்கம் பொருந்தவே எங்குவந்தீர். 173

வேங்கைபுங்காட்டு மிருகங்களுக்கெல்லாம் பாங்குடன்தப்பிப்பிழைத்துவந்தீர், விதிகாரணமதுபார்வளர் பதிதானிது எதுவோசொல வேணுமென்றாரந்த வேடரெல்லாம். 174

சொல்லுவேன்கேளுங்க ளையமாரேவெகு தூரம்வடகயிலாசம்
விட்டு, துங்காநதி கங்காசல மங்காம லுகந்தாடியே தொல்லுலகெ
ங்கணுஞ் சுற்றிவந்தேன். 175

தெண்டிரைசூழும் பதியருணாசலஞ் சீர்காழியென்னும் சிதம்
பரத்தில், சித்தம்பெற வைத்தம்பல முற்றம்பரி சத்தந்தர தேடி
யொருபலங் கிட்டாமல். 176

கண்டிகதிர்காமங் கோசலதேசங் காசியிலுமதுவாசியென,
கண்டும்பல னுண்டுஞ்செயல் கொண்டும்புக ழொன்றுந்தருங் கன்
னியாகுமரி யாடவந்தேன். 177

சத்தமுஞ்சுத்தமும் வேறுபட்டுத்தலை சுற்றியேபுத்தியுங்கூறு
கெட்டு, தள்ளுற்குலை துள்ளுந்துய றுள்ளுந்துணை கொள்ளும்வெகு
தானந்தமாகிய வேளையப்பா. 178

உங்களைத்தஞ்சமென் றேநம்பிவந்தேனு னங்கைக்குறக்குல
வேடுவரே, உலையாமென கலையாதொரு நிலையாவிட மிலையோவெ
னைக் குண்மைசொல்வீரெங்க ளையமாரே. 179

அப்படியேயுங்கள் சொற்படிகேழ்க்கிறோமன்புள்ள தங்கையொ
ருத்தியுண்டு, ஆடுங்கயல் கூடும்விழி நீடுந்தினை நாடும்புன மாதே
யிருக்குது வாருமென்றார். 180

மெள்ளமெள்ளக்கை பிடித்துபண்டாரத்தை வேடிக்கையாக
நடத்திக்கொண்டு, வேலன்செய லாலேயனு கூலம்பெறு வாயென்ற
வர் மெல்லியற்கேதுணை யாகவைத்தார். 181

தங்கமேபெண்குயி லேமயிலேவள்ளித் தாயேநம்குல சாமி
யைப்போல், தாபந்த மாய்வந்தவர் சோகங்கன பாவம்மிது தங்க
மென்றோர்களை தள்ளுவாரோ. 182

ஆனாலுமிந்தப் பரதேசியோமெத்த அதிதியைப்போலவுங்கா
ணுதம்மா, அன்பாயிவ ரின்பால்மிக வன்பேசெய துன்பால்கிரு
பை யாகவந்தனஞ் சுகமிதென்றார். 183

நல்லதினைக்கொய்து போம்பொழுதுங்களை நாங்களுங்கூட்டி
யேசெய்வோமென்று, நன்றாய்மன மொன்றாகவே சென்றார்மதி
கண்டார்குற நம்பியும்வேட ரனைவோரும். 184

தந்தையண்ணன்சொல்லத் தப்பாமல்வள்ளி சிந்தைதெளிந்து
மனங்குளிர்ந்து, தாகத்தொடு மோகித்தொரு யோகப்பரதேசிக்கி
வள் சரணமென்றிரு கைகுவித்தாள். 185

ஆண்டவனேபண் டாரமேபோற்றியென் னையனேயெங்கிருந்
தெங்குவந்தீர், ஆசிர்பர வேடம்புனை நீடும்பர வாடுஞ்செய லங்கந்
தளர்ந்திடுங்காலத்திலே. 186

மாதவரேசிவசங்கபரேஜயா வேதமெய்ஞ்ஞான தபோதன ரே, வாரும்பர னேயுங்களை திருந்தகை யாருந்தினை மாப்பலகாரங் கொடுத்திடுவேன். 187

காத்தபொருளைக் களைபோகாக்காத்து பேத்தியானேமைப் பண்டாரமல்லோ, கண்டுந்துணை கொண்டுஞ்சுக மென்றும்பலதுன் டாய்படி காப்பாற்றவேணும் கடனுனக்கே. 188

நல்லதுபண்டாரஞ் சுவாமிசற்றேபொறு உள்ளதுபோலேபசிக் கமுது, நாவும்முணர் வாகத்தினை மாவும்மிகத் தேனும்பழம் நான் கொண்டுவாறேனென் றேயெழுந்து. 189

செந்தினைமாவை யிடித்துப்புடைத்துத் தெள்ளியதேனை விட் டுப்பிசைந்து, தேறுங்கனி மீறுஞ்சுவை யாருங்கனி கூறும்படிசித் திரமாய்பல காரஞ்செய்து. 190

தேக்கிலைகொண்டதைத் தொன்னைதைத்து அதில்தேனுந்தி னைமாவை முன்னேவைத்து, சிறியாளுமை யறியாதவள் தருபோச னப்பரிபூரண தேவாவுண்டுபசி யாறுமென்றாள். 191

மாப்பலகார மித்தாருமையாசும்மா சாப்பிடுஞ்சுவாமியென்றே கொடுத்தாள், வாசம்பல தாரத்தையு மாசைப்பட நேசித்தவர் வஞ் சகமாய்தினை மாவையுண்டார். 192

உண்டந்தமாவைநன்றாகவிழுங்கவே புருண்டுசுருண்டு கண்ணீ ர்தளும்ப, யோடிக்களை மூடியுடல் வாடிக்குட லாடிப்பாக் துள்ளு டைந்தங்கந் தள்ளாடையிலே. 193

கண்டந்தவள்ளி திடீலென்றெழுந்துதன் கால்பதறிகிட்டவோ டிவந்து, கைலாகுடன் மயில்வேலனை குயிலாள்குற ஒயிலாள்தா னும் காதினில்சுக்கைவைத் தூதிநின்றாள். 164

பெண்ணேயென்று ரோடிமுன்னேவந்தாளாடி பேத்தியென் றார்வள்ளி போற்றியென்றார், பேதத்தினை மாவைக்கன மாதேதா ரீவைத்தது பேதகமென்றுந் தெரிந்திலனே. 195

மாவென்றுசொல்லியே நஞ்சைதந்தாய்பாவி தாவென்றுசொ ல்லியே வாங்கியுண்டேன், சதியோவிது நிதியோவென கதியோ தலை விதியோயினி வாதென்னவென்னுயிர் போகுதென்றார். 196

தொண்டையைச்சுற்றிப் பிடிக்குதடியுயிர் கண்டத்தில்நின்று தாடிக்குதடி, சூதுங்கன தீதுஞ்செய லேதுந்தெரி யாதெந்தனை தோதகஞ்செயத் துணிந்தாயே. 197

எட்டிக்கனியோசெங் கொட்டையோபாஷாணக் கட்டியெனக் கென்றோ தேடிவைத்தாய், ஏழைப்பா தேசிக்கிது யேயோப்பலநோ யுற்றது இப்படியுத்தி செய்வாயோ. 198

கன்னியாகுமரி யாடவந்தபலன் கைமேற்பலித்துதே சணடாளி, காதுக்குள்ளே சிவக்கண சூதுற்றுளம் பேதிக்குது கன்னியே தண்ணீர் வேணுமென்றார். 199

தண்ணீரென்றுள்ளந் தயங்கிய பண்டாரசுவாமியிது வென்ன கோலமையா, தலைநாள்விதி பலனோகதி குலபாதக மலவோயிது சம்புசதாசிவன் சோதனையோ. 200

கொம்புத்தேன்விட்டுப் பிசைசந்தபலகாரங் கொண்டுவந்துண்ணக் கொடுத்தபலன், கோலஞ்சுக காலங்கலி காலம்மிது மேலன செயல் கூற்றுவன்போல்வந்தீ ராண்டவனே. 201

நன்மையே நான்செய்ய துன்மையென்றீரையோ நல்லதுக்கோயிதுகாலமல்ல, நானும்பல சாரங்கனி தேனுந்தினை மாவுந்தர நீர் சென்றுசொன்னீரே வஞ்சகமாய். 202

தந்தையண்ணமார்க ளெந்தனுக்குன்னைச் சகுனியைப்போல வேகொண்டுவந்தார், தாவுங்கணை யாவுங்குயிற் கூவும்பனமேவுஞ் சுனை தண்ணீர்சாப்பிடும் போற்றியென்றாள். 203

இந்தச்சுனை நீருந்தவென்றுவிப்போ சந்தேகத்தோற்றுது வேண்டாம்போ, என்பால்மன தன்பாவிரு கண்பாரடி பெண்பாவையே என்பழிவையிங்கே காணுமென்றார். 204

வம்புகள்கொண்ட பண்டாரமேயின்னம் வாயில்வந்தபடி தல்லாம்பேசுகிறீர், மாயன்விதி சூதென்பது எதுந்தெரியாதிக்கினி வாருமிந்தச்சுனை பாருமென்றாள். 205

கள்ளமில்லையிது நல்லதண்ணீரையா மெள்ளயிறங்கிப்புசியுமென்று, கனமாகியவனமீதிலே தனதாகியசுனையிதென கன்னியுமெள்ள விறக்கிவிட்டாள். 206

தாகமுடன்சுனை நீரையள்ளி திசப் பாகமுடனுண்ணுங்வேளையிலே, தடுமாறுதென் னடிசோறுது விடுமோபழி யடிபாதகிசற்றே யொருகையை நீட்டுமென்றார். 207

ஆகாரமாய்தண்ணீர் கேட்டதற்கேயென்னைப் பாதாளந்தன்னிலேதள்ளிவிட்டாய், அரனார்செயல் தருவாரடி குறமாதுனை பறவேனினி யாபத்துக்குப்பாவ மில்லையென்றார். 208

கையைப்பிடித்தென்னைத் தூக்கடிபாவிநான் [illegible] கரைசேருகிறேன், கடிதேதுயர் கொடிதேவெயில் சுடு[illegible] விடுவேனினி காலமெங்கேயிது கோலமென்றார். 209

ஆருமற்றபாதேசியே யுன்கையைத் தாருமென்றே வள்ளிகைபிடித்து, ஐயாவொருகையாதர வையாயிதுமெய்யாயிது ஆண்டவரே வாருமென்றிழுத்தாள். 210.

சந்தோஷம்வள்ளிகை தந்தேலட்சம்பொன் தானென்றுபண்டாரமானந்தமாய், தாக்கக்கன போகத்தொடு மோகக்களையேயுற்றவர் சம்பிரமாகக்கரை யேறிவந்தார். 211

கோகனகக் குறமானேயிருவருங் கூடினதா லொருகுற்றமுண்டோ, கோலத்திரு மேனிக்குபி லீலைத்தொழி லேசுற்றவன்கூசாமலெந்தனைச் சேராயோ. 212

பண்டாரமேயுன்னைக் காத்தபலனெனக்குப் பலித்துதேயிப்போதேகைமேலே, பாபந்தன சோபம்வெகு தாபந்தம தாய்வந்தெனைப்பாசாங்குசெய்தாயே பாதகனே. 213

புண்ணியமென்று நரைக்கிழவாநல்ல தண்ணீர்கொடுத்ததும் வீணுச்சே, பொல்லாதவன் நில்லாதகோ சொல்லாமொழி கல்லாதே நீ புத்திகெட்டவண்டி தூரநில்லு. 214

பிச்சைக்குவந்தவன் பெண்டுக்குமாப்பிள்ளை பிச்சைகொண்டாலதுநிச்சயமோ, பேதைதன்னை மாயித்தனை சூதுற்றிடிதோதக்கிழம் பேசட்டுமென்று நடந்தாளே. 215

அந்தமொழியையறிந்துசிவகிரி கந்தனுஞ்சிந்தை மதிமயங்கி, அருமைக்குற மகளைத்தன முறிமைப்பட மனமுற்றவர் யானைமுகவனைத் தியானஞ்செய்தார். 216

மந்திரத்தியானமாய் கந்தனுரைத்ததை தந்திமுகவனறிந்துகொண்டு, மலைமுடியே சிலையோடவும் பிலமாகிய குலையானையாய் வள்ளியின்முன்வந்து தோன்றினரே. 217

வெண்ணிறங் கொண்டவடிவாகித்தந்தி வீரங்கொண்டுவள்ளிக்கெதிர்வரவே, வெறுண்டஞ்சியே நின்றங்கனே மருண்டுஞ்செடியொன்றுந்துணை காணுமலேவள்ளி யோடிவந்தாள். 218

ஐயாவேபண்டாரசுவாமி நமஸ்காரம் யானைமிரட்டுதேகானகத்தில், அன்பாகவே நம்புமுனை என்பால்மரு துன்பந்தனை ஐயாவடைக்கலங் காருமென்றாள். 219

என்னடியாதகிநீ யென்னைக்கொல்லவோ முன்னமேமாவென்றானஞ்சைதந்தாய், எந்தன்விதி முந்துங்கதி யுந்துஞ்சதி கந்தன்செயல் என்னமோதப்பிப் பிழைத்துவந்தேன். 220

தாகத்துக்குத்தண்ணீர் வேணுமென்றேனுயிர் போகக்கிணற்றிலே தள்ளிவிட்டாய், தத்தித்தலை சுற்றிச்செயல் முற்றிப்படிதொற்றிப்பிரா தாபத்தொடுநான் வெளியில்வந்தேன். 221

மூன்றுவதானையைக் கொண்டுவந்தாயைப் பூண்டாவியங்கந்துடிக்குதடி, மோசப்படி நேசம்விசு வாசம்வெகு தோஷமுனை முக்காலும்நம்பப் படாதுகண்டாய். 222

என்னைவிலக்கி விடுஞ்சுவாமி தாங்கள் சொன்னபடி யெல்லாம்
நான்கேட்பேன், இச்சைப்பட விச்சித்திர மெச்சக்கனன் பட்சத்
தொடு என்றைக்குஞ் சொந்தப்பெண்ணாவேனென்றாள். 223

பெண்களைநம்பியே பக்கமழிந்தவர் கங்குகரையுண்டோ மங்
கையரே, பெருங்குண மாறும்மிகழ் வாரும்பவ னாறும்வரும் பேச்
சுறுதிக்கோர் சாட்சியுண்டோ. 224

சொந்தமனையாட்டி என்றுநீகைதந்து சிவன்பேரிலாணையிட்
டேகொடுத்தால், சோலைத்தட வாழைப்பழம் நாளைப்படி மானத்
தொடு ஆரத்தள்ளியுனைக் காப்பேனென்றார். 225

சொற்படியாணை யிட்டுக்கொடுத்தாள் வள்ளிக் கைப்பிடிநாயக
ன்நீயேயென்றாள், அடரும்பழி யடரும்வினை யடருங்கரி கடரும்ப
ழிசொல்லும்யானையும் போனதுவே. 226

சேயனும்பன்னிரு தோளும் கடம்பணி சென்னியோராறுஞ்
சிறந்திலங்க, செம்பொற்றன பைம்பொற்குற மங்கைக்கெதிர் சம்
பிரமத்தொடு சிங்காரவேலன் மயிற்சேவைதந்தார். 227

கண்ணாரக்கண்டவள் தானென்னவிது காரணமோபரி பூரண
மாம், கந்தன்மலர் விந்தந்தனில்வந்துந்திரு காட்சிபெற்று பெற்று
ளங்கனிந்துசொல்வாள். 228

சாமியான்செய்த பிழைபொறுத்தென்னையுந் தற்காக்கவேணு
ம் நமஸ்காரம், தஞ்சம்புகழ் நெஞ்சங்கன மஞ்சங்கண பஞ்சந்தனில
தள்ளாமலெனையாட் கொள்ளுமென்றார். 229

அற்புதமாகிய கண்மணியேயினிச் செப்புவேன் நான்வந்தகார
ணத்தை, அலையிற்றனி நிலையிற்றுயில் நிலையிற்பல மலைகற்றிடு
மாலுமென்மாமன் மகளல்லவோ. 230

முன்னொருசாபத்தால் விபுதைமானுன்னைப் பெண்ணென்று
பெற்றுவளர்த்தாளே, முறைதங்கிய குறமங்கையர் நிறையும்மதி
விரவுந்தலை முனிவனாலொரு மான்வயிற்றில். 231

பின்புசனனங் கொண்டாய் மயிலையதின்முன்புசரவணப்பொ
ய்கையிலே, பேசுங்கனி நேசம்பிர வாசம்பிர காசுந்தா பெண்ணே
திருவவ தாரஞ்செய்தேன். 232

வந்துனைச்சேரவென்றேபயன் கற்பனைநந்திடுங்காரணமிது வ
ல்லோ, மாதேயடி னோதேமலை யாதேபுவி மீதேயினமன்மதனும்ப
திபோலவுமே. 233

என்றைக்குஞ்சோடு பிரியாமற்சுகங்கொண்டு கொக்கோகமு
றைப்படியே, இருபேரொரு மனதாகவே குருவுஞ்சிவ வழும்போலவு
மேகசையோகமாய வாழ்ந்திருப்போம். 234

மூத்தக்குடியொரு பெண்டுண்டவளிலும் நேற்றியாயுன்னைக் கண்பார்த்திடுவேன், மோகம்வெகு தாகமகன் பாரஞ்சகபோகத் தொடுமொய் குழல்வள்ளியைக் கைகலந்தார். 235

வாலசரவணவேலவனும் வள்ளியும் லீலையனேகவிதம்விதமாய் மானுஞ்செயல் தானும்பினல் கானந்தனில் வேடிக்கையாய் மன்மத கேளிக்கை யாயிருந்தார். 236

வட்டிப்பாதங்கள் போலவுங்கூடியே விட்டுப்பிரியாத வங்கணமாய், உரிதாய்வெகு பரியாசமே பெரிதாகிய வரியோன்மகளொன்றைவிட்டொன்றைப் பிரியாமல். 237

நஞ்சுண்டகொண்டையைப் போல்மயங்கியங்கே கொஞ்சுங்கிளிமொழிவஞ்சியுந்தான், நாடுஞ்செயல் கூடுங்குயில்பேடுஞ் சரிகோடுந்தர நானுன்னைவிட்டு பிரியேனென்றாள். 238

திரளுதமையல்கொண் டேயிருபேர்களும் மாறுதமோகக்கடல் குளித்து, சித்தம்பரி சுத்தம்பெற வைத்துக்கனி முத்தந்தரதென்றலுலாவிய கானகத்தில். 239

கோபந்தெளிந்து கந்தனும் வள்ளியுந் தாபந்தணிந்து வெளியேறி, துறவாகியகுறமானையும் விரைவாகவே பரண்மீதிலே தோழியர்தம்முடன் சேருமென்றார். 240

வந்ததடத்தின் வழியேகுறக்குலப் பைந்தொடி சென்றனள் கானகத்தில், கனவேகமா தெனவேகிய கனியாயெ தினைசூழ்புனல் வந்துகண்டாள் வள்ளி பாங்கியரும். 241

கூந்தலுலர்ந்துகுலைந்ததென்னமிகச் சேர்ந்திருகண்கள்சிவந்ததென்ன, கோலம்பயில் சாலம்மனு கூலந்தருமாலிங்கித கொங்கையெல்லாம்வடு கண்டதென்ன. 242

தண்ணீர்சுனையில் நடந்திடுங்காரணம் பெண்ணேவள்ளித்தாயேசொல்லுமென்று, தயவாயுரை மயமோகுற மயிலேயிதுபயிலே கதைசந்தேகமென்றார்கள் பாங்கியர்கள். 243

சொல்லுவன்கேளடி யன்னமேகண்மணி தோகையேயென்னுயிர்ப் பாங்கிபரே, சுனையுந்தக புனையுங்கிழ வனையுங்கழவினையும்படி கோபத்தைமாற்றித் தண்ணீர்கொடுத்தேன். 244

தண்ணீர்கொடுக்கின்றவேளையிலே வெகுவுன்னிதமாயந்தகானகத்தில், சந்தந்தொனி திக்குஞ்சிலை சித்தம்பய முற்றங்கனே தந்திடியும் வாய்விட் டலறிடவே. 245

சிந்தைகலங்கி பயந்தேனடியம்மா பைந்தொடியே நான்வரும் வழியில், செடியும்வெயி பொடியும்பல மொடியும்மொழிவழியும்படி தேகமெல்லாமுட் கிழித்துதென்றாள். 246

அப்படியேவள்ளி யம்மையுஞ்சொன்னசொல்லேவாப்பிதமில்லா மல்தோழியர்கள், அதிமோகன ரதியேயொருவிதமாய் முகம்தி சோறுது யேதுசொல்வாயென்றூர் பாக்கியர்களே. 247

பாக்கிகளிப்படி கேட்டிடவேவள்ளி யேங்கிநின்றூரிந்த வேளை யிலே, பருவத்துடனேவேடுவர் சுருபத்துடனேவந்துமே பாணுக் கெதிர்நின் றேதுசொல்வார். 248

காமனைய்தமானிந்தக் கானகந்தன்னிலே தான்வந்துதேயதைக் காணீர்களோ, ஒளியுற்றிடுஞ் சபைபெற்றதோர் மொழிசுற்றிடும் வழிபெற்றிடும் நாகரீகமுள்ள தோகையரே. 249

என்றுதான்வேடுவன் ராசனுஞ்சொல்லவே நன்றுநன்றென்று தான்பாக்கியர்கள், எங்கள்சிறு பெண்ணென்று ரிங்கிதத்துடனிங் குவந்துதா னென்னமொழி சொன்னீர்வேடுவனே. 250

மாந்தளிரால்மான் எப்வதுண்டோசும்மா யேன்தான்பொய்க ள்சொல்லுகிறாய், நீசெய்திடும் மானுக்கிரு கால்ரண்டுகை மேனத் தொடுகாதோலேயும்வானச் சேலேயுண்டோ. 251

சொல்லென்றுவேடுவ ராசனேக்கேட்கவே நல்லதெனறுசும்மா தானிருந்தார், சரசத்தொழி லேமிஞ்சிய சரசக்குயிலேயுள்ளதைச் சொல்லென்றுவள்ளியைக் கேட்டாரே. 252

ஏதடிபாங்கிகாள் நான்சொல்லும் வார்த்தைக ளூதென்றுசொ ன்னீரங்கிதமாய், எனைநீங்களுந் தனதாகவே மனஞ்சோதிப்பதெ துகாரண மேறுமறியே னெனவுரைத்தாள். 253

உள்ளதைச் சொல்லென்று லெங்களுடன்மொழி கள்ளமாய்ச் சொல்வது ஞாயமல்ல, ஒளியாமலே தெளிவாகிநீ மொழிவாய்முக ஞ்சுளியாமலே உண்மையாய்ச் சொல்லென்றூர் தண்மையுடன்.

தண்மையாய்ப்பாங்கி ளுண்மையைச்சொல்லென நன்மையு டன்வள்ளிநாயகியும், தனதாகிய சகிமார்களே வினவென்றொருமன தாகவே தன்கதையைவிள்ளமனந்துணிந்தாள். 225

விள்ளுவன்கேளென் றுயிர்த்துணையாகிய மெல்லியெனும் சகி மாதர்களே, விதிகாரண மதினுலேயோ வதியோகமா யொருவேடு வன்வேஷங்கொண்டென்முன்னே வந்ததுவும். 256

வந்தவரென்னுடன் சொந்தமாய்வார்த்தைகள் விந்தையுடன் பேசி நின்றிடவும், வனமேவிய வெனதண்ணர்கள் சினமாய்வர தி னேமேவிய வனத்தில்வேங்கை மாமானதுவும். 257

வேங்கைமரத்தையுங் கண்டண்ணரெல்லோரும் வேலன் செ யலெனது போனபின்பு, வேறுருபமாய் நாடிவந்தெனைக் கூடிடாயெ னமோடிபேசியே வேடுவாசனுய் நிற்கையிலே. 258

அப்போது அண்ணர் வருவதறிந்து தான்தப்பாது ஞானுவய னுசென்ற, அரிதாகிய பெரியோரென பொறியைம்புல னிடர் நீங்கிய ஆதிசிவனைப்போல் நின்றதுவும். 259

நின்றவரைக்கண்டு அண்ணமார் கூட்டியே நன்றாக நம்மிடஞ் சேர்த்ததுவும், நினைவாகியே நினைமாவையுக் தனதாகவே மனதாகிய நேர்மையாயுண்டபின் தாகமென்றார். 260

தாகந்தீரத்தண்ணீர் நான்கொடுத்தேனென்மேல்மோகங்கொண்டார்காமும் கோபமுங்கொண்டேன், தானும்வழி கூடியிருட்காலத்தனில் யானும்வர தந்தியெனும்யானை வந்ததுவே. 261

ஆனைவருவதறிந்து அவர்பக்கம்போனேனென் விட்டவராதேயென்றார், அவராசையு நிறைவேறிட உறவாகினேன் பெரிதாகிய யானையும்கானகஞ் சென்றதுவே. 262

சென்றபின்வேலவ ராறுமுகத்தோடு வந்தனரெந்தனுக் காட்கியுடன், தெரிசித்திடவேதந்தனர் பரிசுத்தம தாய்நின்றவர் தேன்மொழியாளுள்ள சேதிசொன்னாள். 263

இப்படியென்றொரு வார்த்தைநீமுன்சொன்னால் தப்பிதஞ்சொல்வமோமாதாசே, இனிதாயொருமனதாகவேயனேமேவியதனதாகினவெல்லோர்க்கு நன்மைதானென்று சொன்னார். 264

சந்தோஷமாகவே பாக்கியரிருவருக் கந்தன்மலர்க்கழல் தான்துதித்துச், சரணாகதி யெனவென்றுமே குருநாதனே துணையென்றுமேசாஷ்டாங்கமாகவே தெண்டனிட்டார். 265

உங்கள்மேல்குற்றங்க ளில்லையடிபாக்கி பெண்களாயெங்களிருவருக்கும், உரவாகிய தருவீரெனக் குறவாகிய துரைவேலவன் உண்மையைச்சொல்லப் பாக்கியர்கள். 166

சாடையறிந்து வனம்போனார் கந்தன் பேடைமயில் வள்ளியாளுடனே, தருணம்மிது தானென்றுமே கருணையுகந்தேகூடினர்சல்லாபமாக விருவருந்தான். 2·7

சாடையறிந்து வனம்போனார் கந்தன் பேடைமயில் வள்ளியாளுடனே, தருணம்மிது தானென்றுமே கருணையுகந்தே கூடினர்சல்லாபமாக விருவருந்தான். 268

முருகர் ஒயிற்கும்மிப்பாடல்
முற்றிற்று.